පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 95

ආයතනයේ නම : කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 95

நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்கனிற்குப் பெறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடாபாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No: 95

Name of the institution: Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and Steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 95
நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

பயனுள்ள தகவல் தொழில் நுட்ப முறைமையைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் வருமானத்தை சேகரித்தல், மேலும் அதிகரித்தல் ஆகியவற்றின் நிமித்தம் அக்கறையுடைய தரப்புகளினாலும் மற்றும் அக்கறையுடைய தரப்புகளுக்கு மத்தியிலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதற்கான ஆரம்ப தொழில் நுட்ப குழுவின் முன்னேற்றம் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஆராயப்பட்டுள்ள திகதி - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி	
குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	**குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு / முன்வைத்துள்ள சிபாரிசுகளை செயற்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை**
06. <u>விவசாயத் திணைக்களத்தினது தகவல் தொழில் நுட்பத்தின் ஊடாக அரச வருமானத்தை அதிகரிப்பது பற்றிய திட்டங்கள்</u>	
• தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கல் சேவைக்கான (National Plant Quarantine Service) சர்வதேச வர்த்தக நிலையத்தின் (International Trade Center) மூலதன மற்றும் தொழில் நுட்ப உதவியுடன் உடனுக்குடன் கட்டணம் செலுத்தும் முறைமையை நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை.	இது 2024.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
• மக்கள் வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் எனவும், 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் குறித்த திட்டம் நிறைவு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	மக்கள் வங்கியுடன் ஒப்பந்தம் செய்து E-கொடுப்பனவு முறைமையின் ஊடாக கட்டணங்கள் அறவிப்படுகின்றன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

• அதன் மூலம் 18 மில்லியன் ரூபா முதல் 100 மில்லியன் ரூபா வரை வருமானத்தை அதிகரிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளமை.	இந்த E- கொடுப்பனவு முறைமையின் ஊடாக வருமானம் அதிகரிப்பதில்லை. இது கட்டணங்களை அதிகரித்தும் மற்றும் புதிய கட்டண முறையியல்களை செயற்படுத்தியும் அதற்கு அமைய பெற வேண்டிய ஒரு வருமானமாகும்.
• KOICA இன் உதவியின் கீழ் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாவரங்கள் தனிமைப்படுத்தி தொற்றுநீக்கும் தகவல் முகாமைத்துவ முறைமையின் (Plant Quarantine Information Management System (PQIMS) மூலம் இறக்குமதி அனுமதிகளை வழங்குதல் அடங்கலாக அனைத்து செயற்பாடுகளும் தானியக்க ரீதியில் இயங்குகின்றமை. • குறித்த கருத் திட்டம் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவு செய்யப்படும் என்பது பற்றி	தாவரங்கள் தனிமைப்படுத்தி தொற்றுநீக்கும் தகவல் முகாமைத்துவ முறைமை (Plant Quarantine Information Management System (PQIMS) இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது. I. இறுதி பரிசீலனை அறிக்கை KOICA நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் இந்த அறிக்கைக்கு இணங்க நடவடிக்கையை எடுத்து வருகின்றது. II. இறுதிப் பதிப்பு வெளியீட்டின் (Final Version Release) பின்னர் ஒரு Hosting Server கொள்வனவு செய்யப்பட்டு தாவரங்கள் தனிமைப்படுத்தி தொற்றுநீக்கும் முகாமைத்துவ முறையை (PQIMS) தாபிக்க வேண்டும்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
(2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கைகளும் மற்றும் தற்போதைய செயலாற்றுகையும்)

ஆராயப்பட்டுள்ள திகதி - 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் திகதி

குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு / முன்வைத்துள்ள சிபாரிசுகளை செயற்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01. **திணைக்களத்தில் இறக்குமதி செய்யப்பட்டு காணப்படும் பசுமாட்டு விந்து பற்றிய தகவல்கள் கிடைக்காதுள்ளமை** நாட்டின் வருடாந்த தேவையை விடவும் சுமார் 34% வீதம் பசுமாட்டு விந்து அதிகமாக உற்பத்தி செய்யப்படுவது பற்றி குழு வினவியது. கமத்தொழில் அமைச்சின் பிரதான பொறுப்புக்கூறும் அதிகாரி (பி. பொ. அ. / பொ. அ.) அவசரகால சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக அதிகப்படியாக உற்பத்தி செய்யப்படுகிறது எனவும், அதிகப்படியான அளவு திரவ நைதரசன் சேமிக்கப்படுவதால், அவற்றை 20 ஆண்டுகளுக்கு மேல் வைத்திருக்க முடியும் எனவும் தெரிவித்தார். தனியாரின் மூலமாக இறக்குமதி செய்யப்படும் விந்தணுக்களின் அளவு, தரம் மற்றும் அதன் வெற்றிகரமான தன்மை என்பன தொடர்பாக திணைக்களத்தில் புள்ளி விவரங்கள் / பின்தொடர் நடவடிக்கை எதுவும் இல்லாதிருப்பதை குழு அவதானித்தது.	***இறக்குமதி செய்யப்பட்ட பசுமாட்டு விந்து*** இறக்குமதி செய்யப்பட்டு காணப்படும் பசுமாட்டு விந்து பற்றிய தகவல்களை திணைக்களம் பேணி வருகின்றது. அதாவது, இறக்குமதி செய்யப்பட்டுள்ள விந்துவை சேர்ந்த விலங்குகளின் விவரங்கள், விந்தணுவின் வகை, எமது நாட்டில் பயன்பாட்டில் உள்ள குறியீடு, எந்த வகை விந்தணு வெளியிடப்படுகின்றது என்பன போன்ற தகவல்கள் அடங்கிய ஒரு தகவல் முறைமை காணப்படுகின்றது. எதிர்கால தேவையின் நிமித்தம் இது பேணப்பட்டு வருகின்றது. மேலும், இறக்குமதி செய்யப்பட்டுள்ள பசுமாட்டு விந்துவை விநியோகித்த கால்நடை நிறுவனங்கள் மற்றும் அதன் பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்பன தொடர்பான தகவல்களை சேகரித்து தேவையான எதிர்கால பணிகளின் நிமித்தம் இந்த தகவல் முறைமை பேணப்பட்டு வருகின்றது. ***தனியார் துறையால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பசுமாட்டு விந்து தொடர்பான தகவல்*** திணைக்களத்தின் ஒழுங்குறுத்துகையின் கீழ், தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்படும் விந்தணுக்களின் தரம் குண்டசாலையில் அமைந்துள்ள செயற்கை கருவூட்டல் நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டு, சிபாரிசு செய்யப்பட்டுள்ள தரத்திற்கு இணங்க மாடுகளினதும் மற்றும் ஆடுகளினதும் விந்துகள் மட்டுமே செயற்கை கருவூட்டலுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன. அதன்படி, 2018 ஆம் ஆண்டு முதல், தனியார் துறைக்கு சொந்தமான இறக்குமதி செய்யப்பட்டுள்ள பசுமாட்டு விந்து பற்றிய தகவல்களுக்கான தரவு முறைமையை திணைக்களம் பேணி வருகின்றது. தனியார் துறையால்

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

சிபாரிசுகள் / உத்தரவுகள் அரச மற்றும் தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்படும் மாட்டு விந்துகளின் அளவு, தரம் மற்றும் இருப்பு முதலிய விபரங்களை பேணுமாறும், அவற்றை தேசிய புள்ளி விபரங்களினுள் சேர்க்கும் வேலைத் திட்டத்தையும் மற்றும் அவற்றின் வெற்றியையும் பின்னூட்டல் செய்வதற்கு பொருத்தமான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்து அது தொடர்பான ஒரு அறிக்கையை 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதியளவில் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	இறக்குமதி செய்யப்படும் விந்தணு வகை மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்கள், விலங்கு வகை, இந்த நாட்டில் அவற்றின் பயன்பாடு மற்றும் முன்னேற்றம் என்பன தொடர்பான தகவல்களைப் பெறுவதன் மூலம் இந்தத் தரவு முறைமை பேணப்படுகின்றது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

02. <u>திணைக்களத்தில் உள்ள தேசிய தரவுகளின் துல்லியத்தில் சிக்கல்கள் உள்ளமை</u> திணைக்களத்தில் உள்ள தேசிய தரவுகளின் துல்லியத்தில் சிக்கல்கள் இருப்பதை அவதானித்த குழு, 1.3 மில்லியன் பசுவின் விந்தணுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றில் 1 மில்லியன் செயற்கை முறையில் கருவூட்டப்பட்டிருந்ன, ஆனாலும் சுமார் 316,000 கன்றுகள் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தமை பற்றி வினவியது. **<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u>** நாட்டினுள் செயற்கை கருவூட்டலின் வெற்றி விகிதம் 30% வீத அளவில் காணப்படுகின்றது எனவும், உலக அளவில் இதை 40% வீதம் வரை அதிகரிக்க முயற்சிப்பதாகவும், உலகளவில் இந்த அளவு சுமார் 50% வீதமாக காணப்படுவதாகவும் கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. / பொ. அ. தெரிவித்தார்.	***1. உற்பத்தித் தரவுகள்*** திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பிரிவினால் பண்ணைத் தரவுகளைப் பெற பண்ணைகளின் பதிவு தரவுத்தளம் பேணப்படுகின்றது. ***2. இனப்பெருக்கத் தரவுகள்*** ஒவ்வொரு மாதமும் அனைத்து மாகாண விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர்களாலும் இனப்பெருக்கத் தரவுகள் பெறப்பட்டு தரவுகள் முறைமை பேணப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், துல்லியமான உண்மைத் தகவல்களைப் பெறுவதற்காக திணைக்களம் அனைத்து மாகாண பணிப்பாளர்களுக்கும் (விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்) APC மென்பாகத்தை வழங்கியுள்ளது. மேலும் தற்போது ஊவா மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் இந்த மென்பாகத்தை கணிசமான அளவில் பயன்படுத்தியுள்ளது. தற்பொழுது இனப்பெருக்கத் தரவுகள் வழங்கப்படுகின்றன. அதே போல், செயற்கை கருவூட்டல் செயற்பாட்டை மேலும் வெற்றியளிக்க செய்வதற்கு திணைக்களம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 01. செயற்கை கருவூட்டல் தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டு அனைத்து மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 02. அதே போல், செயற்கை கருவூட்டல் செயல்முறை தொடர்பான வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளதுடன், அது மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களுக்கும் மற்றும் தனியார் துறையினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. 03. செயற்கை கருவூட்டலை அதிகரிக்க, பொலன்னறுவை செயற்கை கருவுட்டல் நிலையத்தினால் நடத்தப்படும் செயற்கை கருவூட்டல் பற்றிய பயிற்சி செயலமர்வுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

03. <u>**பொது மற்றும் தனியார் துறை மூலம் மேற்கொள்ளப்படும் செயற்கை கருவூட்டலுக்கான கட்டணத்தை நிர்ணயித்தல்**</u> செயற்கை கருத்தரிப்பாளர்களின் சேவைகளுக்கான கட்டணத்தை நிர்ணயிப்பது பற்றி குழு வினவியது. <u>**சிபாரிசுகள் / உத்தரவுகள்**</u> இங்கு, ஒவ்வொரு மாகாண சபையும் அரசாங்கத்தின் செயற்கை கருவூட்டல் நிபுணர்களுக்கான கட்டணத்தை தனித்தனியாக நிர்ணயிக்கும் எனவும், தனியார் துறையுடன் தொடர்புடைய செயற்கை கருவூட்டல் நிபுணர்கள் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும், அவர்களுக்கான கட்டணம் எதுவும் தற்பொழுது நிர்ணயிக்கப்படுவதில்லை எனவும் உரிய அதிகாரிகள் தெரிவித்தனர். தனியார் துறையின் செயற்கை கருவூட்டல் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, கட்டணத்தை நிர்ணயிப்பதில் சில தலையீடுகளை செய்யுமாறு திணைக்களத்திற்கு குழு அறிவுறுத்தியது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	அரச மற்றும் தனியார் துறைகளின் மூலம் செயற்கையாக கருவூட்டும் கட்டணங்களை நிர்ணயிக்கும் நிமித்தம் தீவு முழுதிலும் ஒரே மாதிரியான ஒரு முறையியலை பிரயோகிப்பதற்கு பொருத்தமான தகவு திறன்களை தயாரிக்க கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நியமித்துள்ள குழு தயாரித்த அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாகாண பிரதம செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

04. <u>செயற்கை கருவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதில் மாகாண திணைக்களங்களை இணைத்துக் கொள்ளல்</u> <u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u> எதிர்வரும் காலங்களில் 9 மாகாண திணைக்களங்களுக்கும் அழைப்பு விடுக்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த குழு, இன்றைய குழு கூட்டத்தில் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பில் 9 மாகாண திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவித்து, அறிவுறுத்தல்களையும் மற்றும் தேவையான பொறுப்புகளையும் வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளது. I. தனியார் துறையையும் இணைத்துக் கொண்டு செயற்கையாக கருவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல். II. தற்பொழுது அரசாங்கம் செயற்படுத்தும் வேலைத் திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுத்தல். III. ஒப்பந்த அடிபடையில் அரசாங்க சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள ஊழியர்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்தல். முதலிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு அறிவுரைகளை வழங்கிய குழு 9 மாகாண திணைக்களங்களுக்கும் அறிவித்தல் / பொறுப்புக்களை சாட்டுதல் தொடர்பான விபரங்கள் அடங்கிய ஒரு அறிக்கையை 2023 ஆம் ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 திகதியளவில்	இது வரை 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிற்குள் மாகாண அளவில் 55 செயற்கை கருவூட்டல் தொழில் நுட்ப நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்திற்குள் 100 பேருக்கு செயற்கை கருவூட்டல் பற்றிய பயிற்சியை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அது போல், செயற்கைக் கருவூட்டலை மேலும் முறைப்படுத்துவதற்காக, பொது தனியார் பங்காளித்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (Public Privet Partnership - PPP) 07 தனியார் பால் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, செயற்கைக் கருவூட்டல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ / பொ. அ. இற்கு உத்தரவிட்டது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

05. <u>பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய கொள்கையை தயாரித்தல்</u> நாட்டின் தினசரி திரவப் பால் தேவையில் 40% வீதம் மட்டுமே நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறமை பற்றி குழு வினவியது. 2009-2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டில் திரவப் பால் உற்பத்தி வருடாந்தம் அதிகரித்துள்ள போதிலும், திரவப் பாலுக்கான வருடாந்த தேவையும் ஒப்பீட்டளவில் அதிக விகிதத்தில் அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாக வெளிநாட்டுப் பொருட்கள் சந்தைக்கு வந்துள்ளதாகவும் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். பாரம்பரிய சிறு விவசாயிகளை தொழில் முனைவோர் நிலைக்கு மேம்படுத்தும் வகையில் 100 லீற்றர் பால் உற்பத்தி கொள்ளளவுடைய 15000 பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தில், இந்த விடயம் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த விடய அம்சங்கள் குறித்து குழு கவனம் செலுத்தியது. பால் உற்பத்தியை அதிகரிக்க திணைக்களம் பின்பற்ற வேண்டிய திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் என்பன பற்றியும் குழு மேலும் வினவியது.	பால் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான தேசிய கொள்கை, துறை தொடர்பான அனைத்து அக்கறையுடைய தரப்புகளினதும், பயனாளிகளினதும் மற்றும் சர்வதேச நிபுணர்களினதும் அறிவையும் பயன்படுத்தி பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு தோராய அறிக்கை நிறைவு செய்யப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் நிமித்தம் அனுப்பப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
...ance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

<u>**சிபாரிசுகள் / உத்தரவுகள்**</u> அதன் போது, i. அமைச்சினால் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய கொள்கையை தயாரிப்பதற்காக தற்போது நியமிக்கப்பட்டுள்ள குழு உறுப்பினர்களின் நியமனக் கடிதங்கள் மற்றும் குழுவின் கட்டமைப்பு முதலியன தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய ஒரு அறிக்கையை 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதிற்கு முன்னர் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும், ii. தயாரிக்கப்பட்டுள்ள தேசிய திட்டத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கும் காலப் பகுதியை உள்ளடக்கிய ஒரு அறிக்கையை 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதிற்கு முன்னர் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும், கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

06. <u>ஆடுகளின் செயற்கை கருவூட்டலின் அளவு வருடாந்தம் குறைந்த அளவில் உள்ளமை</u> ஒவ்வொரு ஆண்டும் ஆடுகளுக்கு செயற்கை கருவூட்டல் குறைந்த அளவில் இருப்பதை குழு அவதானித்தது. இயற்கையான ஆடு வளர்ப்பு வெற்றிகரமாக இருந்தால், அதை விரிவுபடுத்துமாறும், செயற்கை கருவூட்டல் மிகவும் வெற்றிகரமாக இருந்தால், அது குறைவதற்கு வழிவகுத்த காரணிகளை ஆராயுமாறும் குழு பி. பொ. அ. / பொ. அ. இற்கு அறிவுறுத்தியது.	கள ரீதியில் ஆடுகளுக்கு செயற்கை கருவூட்டும் தேவையை பூர்த்தி செய்ய போதுமான விந்துகள் திணைக்களத்திடம் உள்ளன. கள ரீதியில், பண்ணையாளர்கள் பண்ணை ஆடுகளை பயன்படுத்தி ஆடுகளின் இனப்பெருக்க செயற்பாடுகளை அதிகளவில் மேற்கொள்கின்றனர். கால்நடைகளை கூட்டமாக வளர்ப்பதும் மற்றும் சிறிய அடையாளங்களை கண்டறிவதில் சிரமமும் இதற்கான காரணங்களாகும். எனவே இனப்பெருக்கத்திற்கு பண்ணை பசுக் கன்றுகளை பயன்படுத்துவது வெற்றிகரமானதாகும் என தெரிய வந்துள்ளது. ஆனாலும் நுணுக்கமான முறையில் வளர்க்கப்பட்டு வலுப்படுத்தப்படும் ஆட்டுப் பண்ணைகளில் செயற்கை கருவூட்டல் செயற்பாடு ஓரளவு வெற்றி கண்டுள்ளதால், தேவையான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. கள ரீதியில் ஆடுகளுக்கு இருக்கின்ற கேள்வியை பூர்த்தி செய்வதற்காக, தெலஹெர மற்றும் இம்புலந்தண்ட ஆகிய பகுதிகளில் இரண்டு அணுக்கருப் பண்ணைகளை திணைக்களம் பராமரித்து வருகின்றது. ஆனால் விலங்குகளுக்கு இடையில் CAE நோய் தொடர்ந்து பரவி வருவதால், இந்த பண்ணைகளில் இருந்து விலங்குகளை களத்தினுள் விடுவிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது, செயற்கை கருவூட்டல் மூலம் ஆடு வளர்ப்பை பிரபலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

07. <u>செயற்கை கருவூட்டலின் மூலம் உருவாக்கப்படும் தேர்ந்தெடுத்த மாட்டு கன்றுகளின் இனப்பெருக்கத்தை தீவிரப்படுத்தும் கருத் திட்டம்</u> இந்தக் கருத் திட்டத்தின் விலங்கின பதிவு நடவடிக்கைகள் வருடாந்தம் குறைந்துள்ளதாகவும் மற்றும் மாகாண சபைகளுக்கு உரிய நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கருத் திட்டத்திற்கு உரிய முறையில் அந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதா என குழு வினவியது. **<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u>** இதன் நிமித்தம் செயற்படுத்தப்படும் ஒட்டு மொத்த வேலைத் திட்டம் தொடர்பான புள்ளி விபரங்கள் அடங்கிய ஒரு அறிக்கையை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	இந்தக் கருத் திட்டம் 2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. மேலும் அதன் முன்னேற்றம் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களால் அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டு தரவு முறைமை இற்றைப்படுத்தப்பட்டு எதிர்கால தரவு பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

08. <u>அரசாங்கத்திற்கு சொந்தமான இம்புலந்தண்ட மற்றும் தெலஹெர ஆகிய இனப்பெருக்க நிலையங்களில் இறக்குமதி செய்யப்பட்டு காணப்படும் ஆடுகள் தனிமைப்படுத்தப்பட்டு தொற்றுநீக்கப்பட்டிருந்த காலப் பகுதியிலும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதியிலும் நோய்வாய்ப்பட்டமை, இறந்துள்ளமை மற்றும் அவை இனப்பெருக்கம் செய்த அதிகளவான குட்டிகள் இறந்துள்ளமை</u> இந்த விலங்குகளின் சுகாதார சீர்கேடுகளை திணைக்களம் சரி வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்த அதே வேளையில் விலங்குகளை இறக்குமதி செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதி ஒப்பந்த நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்தும் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அவுஸ்திரேலியாவில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு சான்றிதழைப் பெற்ற பின்னரே விலங்குகள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் மற்றும் தயாரிக்கப்பட்டிருந்த ஒப்பந்தத்தில் தனிமைப்படுத்தப்படுவது பற்றிய மட்டுப்பாடுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும் விவசாய அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.	கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் இம்புலந்தண்ட ஆடுகள் இனப்பெருக்கப் பண்ணையின் முறையான ஒரு ஆய்வின் நிமித்தம் ஒரு குழு அமைச்சினால் நியமிக்கப்பட்டதையடுத்து அந்தக் குழு 2024.01.10 ஆம் திகதி விலங்குகளை ஆய்வு செய்து, CAE நோயினால் பாதிக்கப்பட்டிருந்த விலங்குகளை அகற்றி, CAE நோய் இல்லாத ஆடுகளின் எண்ணிக்கையை பராமரிக்குமாறு சிபாரிசுகளை முன்வைத்துள்ளது. 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் சிபாரிசுகளில், இந்தப் பண்ணையின் உள்ள இந்த துரதிர்ஷ்ட நிலைமையை தீர்ப்பதற்கு 7 யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நோயால் பாதிக்கப்பட்டுள்ள விலங்குகளை அகற்றுமாறு தவிர எந்தவொரு சிபாரிசுவிலும் அனைத்து விலங்குகளையும் அகற்ற வேண்டும் என குறிப்பிடப்படவில்லை. இவ்வாறு இருந்த போதிலும், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் (விலங்குகள் இனப்பெருக்கம்) மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் 2024/07/16 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இம்புலந்தண்ட ஆட்டு பண்ணையில் உள்ள அனைத்து விலங்குகளையும் அகற்றுவதற்கு அமைச்சகத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சின் செயலாளரால் நியமித்த குழு அனைத்து விலங்குகளையும் அகற்றுமாறு சிபாரிசு செய்யவில்லை. நிபுணர் குழு முன்வைத்த சிபாரிசுகளில், நோயினால் பாதிக்கப்பட்டுள்ள கால்நடைகளை பண்ணையில் இருந்து அகற்றுமாறும், ஆரோக்கியமான கால்நடைகளைத் தேர்ந்தெடுத்து, முறையான இனப்பெருக்கத் திட்டத்தின்படி வளர்க்கப்படும் குட்டிகளை விநியோகிக்குமாறும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவும் அமைச்சு நியமித்த நிபுணர் குழுவும் இந்த நிலைமைகளின் கீழ் இந்த ஆடு வளர்ப்பு நிலையத்தை அணு இனப்பெருக்க நிலையமாக தொடர்ந்து நிருவகிப்பது பொருத்தமற்றது என கருத்துத் தெரிவித்துள்ளன. மேலும், பின்வரும் சிபாரிசுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u> **இது தொடர்பான முறையான விசாரணையை மேற்கொண்டு குழுவிற்கு முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் மற்றும் விலங்குகள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக வெளிநாடு சென்ற அதிகாரிகளினதும் மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டு குழு (Technical Evaluation Committee) அதிகாரிகளினதும் திறமையின்மை அல்லது சேர்க்கப்படுதல் வேண்டும் எனவும் இது பற்றி.** **அலட்சியம் அதன் மூலம் நிரூபனமானால், அத்தகைய குற்றங்களை குறிப்பிட்டு குறைந்தபட்சம் அவர்களின் தனியாள் கோவைகளுக்கு எச்சரிக்கை கடிதமாவது குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனவும் கமத்தொழில் அமைச்சின் பி பொ. அ. / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது.** **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	1. நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த கால்நடைகளை உடனடியாக அகற்றுதல். 2. CAE நோய் இலங்கையில் புதிதாக கண்டறியப்பட்டுள்ள நோயாக இருந்தாலும், பண்ணையில் இருந்து விலங்குகள் விடுவிக்கப்பட்டதால், நிகழ்வுகள் பற்றிய ஒரு ஆய்வை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளல். 3. இந்த இனப்பெருக்கப் பண்ணையில் உள்ள வளங்களின் அளவை கருத்தில் கொண்டு, இந்தப் பண்ணையை வணிகப் பண்ணையாக நடத்தாமல், அனுவளர்ப்புப் பண்ணையாக நடத்தலாம் என்பதால், பாதிக்கப்பட்டுள்ள விலங்குகளை விரைவாக பரிசோதித்து, இனங்கண்டு அவற்றை விரைவாக அகற்றுதல், புதிதாகப் பிறந்த கன்றுகளை விரைவாக பிரித்து அவற்றின் நோய்நிலையை பரிசோதித்து கள ரீதியில் பகிர்ந்தளித்தல், கன்றுகளை பண்ணைகளில் இருந்து இறைச்சிக்காக மிருக மருத்துவரின் மேற்பார்வையில் அகற்றுதல். மேற்குறித்த சிபாரிசுகளை கருத்திற் கொண்டு இம்புலந்தண்ட ஆடு வளர்ப்பு பண்ணையை பராமரிக்க கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அமைச்சு பணிப்புரை வழங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் இந்த நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள கோழிக் குஞ்சுகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

09. **<u>கரந்தகொல்ல நடுத்தரளவான கோழி ஆராய்ச்சி நிறுவகத்தில் கோழிக் குஞ்சுகளின் உற்பத்தி வீழ்ச்சி</u>**

எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடி அடங்கலாக பல பிரச்சினைகளின் காரணமாக கோழி உற்பத்தி ஆராய்ச்சி நிறுவகத்தை உரிய முறையில் இயக்க முடியாது போனதாலும், விலங்கு தீனிகளை பெற்றுக் கொள்ள முடியாது போனதாலும் இங்குள்ள குஞ்சுகளின் எண்ணிக்கையை குறைக்க தீர்மானித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u>

இந்த கோழிக் குஞ்சுகளின் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தமை தொடர்பான ஒரு அறிக்கையை 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆம் திகதிற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது.

கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு	கோழிக் குஞ்சுகளின் உற்பத்தி		மொத்தம்
	ஆண் குஞ்சுகள்	பெண் குஞ்சுகள்	
2018	58601	62105	120706
2019	62204	65705	127909
2020	49824	52439	102263
2021	50378	52986	103364
2022	38612	39577	78189
2023	59285	65266	124551

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகள் காலப் பகுதியினுள் ஏற்பட்டிருந்த கொவிட் தொற்றுநோய் நிலவரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி என்பவற்றினால் போக்குவரத்து செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை, மின்சார நெருக்கடி ஏற்பட்டமை, வெளிநாட்டு நாணப் பற்றாக்குறை ஏற்பட்டமை என்பவற்றின் அடிப்படையில் கோழித் தீனிகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்தமை, கோழித் தீனிகளை விநியோகிக்கும் தரப்புகளினால் உரிய காலப் பகுதியினுள் உணவுத் தீனிகளை விநியோகிக்க முடியாது போனமை, குறிப்பாக கோழிகளின் கேள்வி குறைந்தமை என்பவற்றின் காரணமாக உற்பத்தியின் கொள்ளளவில் ஏற்றத்தாழ்வு போன்ற ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்த நிகழ்வுகள் மற்றும் நாட்டில் எழுந்திருந்த பொருளாதார நெருக்கடி நிலைமகள் என்பவற்றினால் நிதி ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை முதலிய நிகழ்வுகள் இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்துள்ளன. ஆகையால் குறித்த பிரச்சினை இயல்பு நிலைக்கு வரும் வரை இந்த பண்ணையை குறைந்த உற்பத்திக் கொள்ளளவில் நிருவகித்துச்செல்ல பணிப்பாளர்கள் சபை வழங்கிய ஒரு விஷேட தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

எவ்வாறாயினும் 2023 ஆம் ஆண்டளவில் அந்தப் பிரச்சினைகள் தீர்ந்துள்ளதால் இலக்குக்கொள்ளப்பட்டுள்ள கொள்ளளவு இலக்கு அடையப்பட்டுள்ளதையும் மேலும் அறியத் தருகின்றேன்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

10. **<u>கரந்தகொல்ல மற்றும் சீப்புக்குளம் ஆகிய கால்நடைகள் வேளாண்மை கல்லூரிகளில் கல்வி நடவடிக்கைகளுக்கான மாணவர்களின் பதிவு குறைந்துள்ளமை, மாணவர்கள் பாடநெறியை இடையில் விட்டுச்சென்றுள்ளமை மற்றும் கல்வி பணியாளர்கள் பற்றாக்குறை நிலவுகின்றமை</u>** இந்த நிறுவனம் முழு மாணவர் கொள்ளாற்றலுடன் செயற்படுவதில்லை எனவும், பாடநெறிகளுக்கு அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் கிடைக்கின்றன எனவும், மேலும் பாடநெறியின் போது மாணவர்கள் இடையில் ஏனைய பாடநெறிகளுக்கு படிப்பை விட்டு வெளியேறுகிறார்கள் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். **<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u>** அதற்கான பயிற்சிகள் கட்டணமின்றி வழங்கப்படுவதால் மாணவர்களை பதிவு செய்யும் போது ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி விசாரித்து தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	எதிர்காலத்தில் மாணவர்களை பதிவு செய்வது தொடர்பான ஒப்பந்தங்களை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Land & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

11. **<u>கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் / அலுவலக கடமைகள் / பல நிகழ்ச்சித் திட்டங்கள் நிமித்தம் வெளிநாடு சென்றிருந்த உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பணத் தொகையை செலுத்த தவறியிருந்தமை</u>** வெளிநாடு செல்வது எந்த ஒரு நபருக்கும் உரிய ஒரு உரிமையாக இருந்தாலும் அதன் நிமித்தம் அரசாங்கம் செலவு செய்யுமாயின் அதற்கு கைமாறாக அவர்கள் நாட்டிற்கு அவர்களின் சேவைகளை வழங்க வேண்டும் என குழு சுட்டிக் காட்டியது. **<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u>** கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் / அலுவலக கடமைகள் / பல நிகழ்ச்சித் திட்டங்கள் நிமித்தம் வெளிநாடு சென்று இலங்கைக்கு திரும்பாதுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள், அவர்களின் சார்பாக ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு அறவிடப்படவுள்ள நிதிகளை மீள அறவிடுதல் என்பன தொடர்பான ஒரு அறிக்கையை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும், ஒப்பந்தங்களுக்கு கைச்சாத்திட்டுள்ள உத்தியோகத்தர்கள் சொந்தமாகவுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவித்து அந்த உத்தியோகத்தர்களின் சம்பளங்களில் இருந்து அறவிடுவதற்கான சாத்தியம் பற்றி ஆராய்ந்து பார்க்குமாறும், அரசாங்கம் விதித்துள்ள சுற்றறிக்கைகளுக்கு முரணாக அனுமதித்துக் கொள்ளப்பட்டுள்ள காலப் பகுதியை விஞ்சி வெளிநாடுகளில் தங்கி இருக்கின்ற உத்தியோகத்தர்களை சேவையில்	இது தொடர்பான பதில்கள் பின்னிணைப்பு இலக்க்ம 01 இல் தரப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

இருந்து நீக்க நடவடிக்கை எடுக்குமாறும் கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

12. **<u>வெளிநாடு சென்ற ஊழியர்கள் தொடர்பாக மீண்டும் சேவைக்கு அறிக்கையிடுதல்</u>** <u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u> வெளிநாடு சென்றுள்ள ஊழியர்கள் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாதுள்ளமை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளை கருத்திற் கொண்டு சட்டமா அதிபரின் அறிவுரைகளை பெற்றுக் கொண்டு ஒரு பொது சுற்றறிக்கையை வெளியிடும் பொருட்டு நிதி, பொருளாதார ஸ்தீரணப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் பற்றிய அமைச்சினதும் மற்றும் பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய அமைச்சினதும் செயலாளர்களுக்கு அறியப்படுத்த வேண்டிய தேவையை குழு சுட்டிக் காட்டியது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	இது தொடர்பான பதில்கள் பின்னிணைப்பு இலக்க்ம 01 இல் தரப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

13. **<u>முட்டைகளினதும் இறைச்சியினதும் விலை வருடத்தினுள் ஏற்றத்தாழ்வாக இருந்தமை தொடர்பாக இங்கு குழு தனது கவனத்தை செலுத்தியது</u>** இறைச்சியின் விலை ஒப்பீட்டளவில் ஒரே அளவில் நிலையான மட்டத்தில் நிலவுவதாகவும், 2022 ஆம் ஆண்டில் முட்டையிடும் குஞ்சுகளின் இறக்குமதியை ஆகஸ்ட் மாதம் வரை சரியான முறையில் மேற்கொள்ள முடியவில்லை எனவும், அந்த ஆண்டின் இறக்குமதி மொத்த தேவையில் 50% வீதமாக இருந்தமை முட்டையின் விலை அதிகரிக்க காரணமாக இருந்தது எனவும் இது பற்றி கமத்தொழில் அமைச்சின் பொ. அ. தெரிவித்தார். குறித்த ஆண்டு திசம்பர் மாதத்தில் முட்டையினதும் மற்றும் இறைச்சியினதும் விலை அதிகரிப்பது வழமையான நிலையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.	2023 ஆம் ஆண்டில், 116,935 முட்டை தாய் விலங்குகள் இறக்குமதி செய்யப்பட்டன. முட்டை உற்பத்தியை விரைவாக இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்கு, ஒரு மில்லியன் குஞ்சு பொரிக்கும் முட்டைகள் (Hatching eggs) இறக்குமதி செய்யப்பட்டன. மேலும் அந்த முட்டைகளிலிருந்து மேலதிகமாக 500,000 குஞ்சுகளும் உற்பத்தி செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன. அதன்படி 2023 ஆம் ஆண்டிற்கு முட்டை பொரிக்கும் 7.17 மில்லியன் கோழிக் குஞ்சுகள் முட்டை உற்பத்திக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் கோழி இறைச்சி உற்பத்தி 236.11 மெற்றிக் டொன் அளவில் இருந்தது. 2024 ஆம் ஆண்டின் இறுதியளவில் 262.95 மெற்றிக் டொன் என்ற இலக்கை அடைய எதிர்பார்க்கப்படுகின்றது. உற்பத்தி அதிகரித்ததாலும் மற்றும் விலங்கு தீனிகளின் விலை ஓரளவு குறைந்ததாலும், 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் விற்பனை விலையாக 55.00 ரூபா என இருந்த முட்டையும் மற்றும் 1,247.00 ரூபா என இருந்த கோழி இறைச்சியும் முறையே 43.00 ரூபாவாகவும் மற்றும் 1,220.00 ரூபாவாகவும் (தகவல்மூலம் HARTI) மற்றும் அதி குளிரூட்டியில் உறைந்த கோழி இறைச்சியின் விற்பனை விலை 1,150.00 ரூபாவாகவும் குறைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதமளவில், 38,662 தாய் விலங்குகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அது வரை 6.51 முட்டை கோழிக்குஞ்சுகள் இறக்குமதி உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் விளைவாக, ஜூலை மாதம் வரை முட்டை உற்பத்தி 1,567.14 அளவில் இருந்தது. ஆண்டு இறுதியளவில் 3,015.83 மில்லியன் உற்பத்தி என்ற இலக்கு அடையப்படவுள்ளது. அதற்கு இணங்க கேள்வியினதும் விநியோகத்தினதும் அடிப்படையில், தற்போது (2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்) முட்டையின் விலை பண்ணையிலிருந்து (பண்ணை நுழைவாயில்) 30.00 ரூபாவுக்கு குறைவாகவும், சந்தையில் 35 ரூபாவுக்கு குறைவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

14. <u>நாடளாவிய ரீதியில் மிருக மருத்துவர் அலுவலகங்கள் மேற்கொள்ளும் சேவைகளை வியாபித்தல்</u> கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மிருக மருத்துவர் அலுவலகங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படும் விதம் பற்றி குழு வினவியது. **<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u>** இலங்கையில் உள்ள 37 மிருக மருத்துவர் அலுவலகங்கள் மாகாண சபையின் கீழ் வருவதாகவும், தனது அமைச்சு ஆராய்ச்சி சார்ந்த செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் தயாரித்தல், கருத் திட்டங்கள் தயாரித்தல் முதலிய விடங்களின் நிமித்தம் 3 மாதங்களுக்கு ஒரு தடவை மாத்திரம் அவர்களை அழைத்து கலந்துரையாடுவதாகவும் இங்கு கமத்தொழில் அமைச்சின் பொ. அ. தெரிவித்தார். எதிர்காலத்தில் அந்த 9 மாகாண பணிப்பாளர்களையும் மற்றும் கால்நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அதிகாரிகளையும் ஒரே தினத்தில் அழைக்க எண்ணுவதாகவும் தெரிவித்த குழு, மாகாண திணைக்களங்களுக்கும் மற்றும் பிராந்திய மட்டத்தில் உள்ள மிருக மருத்துவர் அலுவலகங்களுக்கும் சொந்தமான பிரதேசங்களில் உள்ள கால்நடை வளங்கள் பற்றிய சரியான துல்லியமான புள்ளி விபரத் தகவல்களை பேணி மிருக மருத்துவ அதிகாரிகளின் பொறுப்புப் பணிகளை அவர்கள் நிறைவேற்றுவதற்காகவும் நிறுவனத்தின் / ஊழியர்களின் பலன்களை அதிகரிப்பதற்காகவும் பொருத்தமான இலக்குக் கொள்ளப்பட்டுள்ள ஒரு வேலைத் திட்டத்தை	இது தொடர்பில், கமத்தொழில் அமைச்சு, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மற்றும் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்று நியமிக்கப்பட்டு ஆய்வுக்கு பின்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

தயாரித்து, அதன் நிமித்தம் இலக்குகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் தேவையான சுற்றறிக்கைகளையும் மற்றும் அறிவுரைகளையும் 9 மாகாணங்களினதும் பணிப்பாளர்களுக்கு வழங்கி அந்த அலுவலகங்களை அடிக்கடி மேற்பார்வை செய்யுமாறும், திணைக்களத்தில் எதிர்பார்த்த சேவையை பெற்றுக் கொடுக்க விஷேட கவனத்தை செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் அது பற்றி குழுவுக்கு அறிவிக்குமாறும் கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது.	

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

15. <u>குரை மற்றும் வாய் நோய்களுக்கு தேவையான 100,000 முக்கூட்டு மருந்துகளை கொள்வனவு செய்த வேளையில் சந்தை விலையை விடவும் அதிக விலை செலுத்தப்பட்டுள்ளமை</u> 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தினது கணக்காய்வு அறிக்கையின் 3.7 (அ) (V) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த கொள்வனவின் போது சுமார் 3.9 மில்லியன் ரூபா மேலதி தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளதை குழு அவதானித்தது. ஒரு கேள்வி விலை மனு தாரர் தரப்பு மாத்திரம் முன் வந்ததால் அந்த தொகைக்கு உரிய கொள்வனவை மேற்கொள்வதற்கு நேரிட்டதாக கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. இதன் போது தெரிவித்தார். திணைக்களத்தின் முன்னாள் பிரதான கணக்காளரும் எழுத்து மூலமாக விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளார் என தெரிவித்த குழு, இந்த விடயம் திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழு கூட்டங்களின் போது கலந்துரையாடப்படாமையையும் குழு அவதானித்தது. **<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u>** மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள இந்த கொடுப்பனவு தொடர்பான ஒரு அறிக்கையை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	பொது கணக்குகள் பற்றிய குழுவினது உத்தரவின் அடிப்படையில் கணக்குகள் பற்றிய குழுவுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

E.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

16. **<u>சில பகுதிகளில் கால்நடை நோய்களுக்கு தேவையான மருந்துகள் கிடைக்காத நிலை உள்ளமை</u>** சில பகுதிகளில் அமைந்துள்ள கால்நடை அலுவலகங்களில் கால்நடை நோய்களுக்குத் தேவையான மருந்துகள் இல்லாதுள்ளமையை குழு அவதானித்துள்ளது. தொற்றுநோய்களுக்கு தேவையான தடுப்பூசி மருந்துகள் மத்திய அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுவதாகவும், தொற்றுநோய்களுக்கு தேவையான தடுப்பூசி மருந்துகள் இந்த நாட்டில் தயாரிக்கப்படுவதாகவும், கால்நடைகளுக்கு அன்றாடம் தொற்றும் நோய்களுக்கு தேவையான மருந்துகளுக்கு மாகாண மட்டத்தில் தட்டுப்பாடு நிலவுவதாகவும் கமத்தொழில் அமைச்சின் பொ. அ. தெரிவித்தார். **<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u>** இது தொடர்பாக 9 மாகாண திணைக்களங்களில் இருந்தும் அறிக்கைகளை பெற்று (மாகாணப் பணிப்பாளர்களின் சிபாரிசுகளின் அடிப்படையில்) அந்தந்த மாகாணங்களில் நிலவும் கால்நடை மருந்துகளின் தேவை தொடர்பான ஒரு அறிக்கையை 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதியளவில் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி. பொ. அ. / பொ. அ. இற்கு குழு உத்தரவிட்டது. **கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது SML/03/03/17/2021 ஆம் இலக்க 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த விடயம் தொடர்பான ஒரு அறிக்கை குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	செயற்கை கருவூட்டல் மற்றும் கால்நடை மருத்துவ சேவை கட்டணங்களை நிர்ணயிக்க உரிய குழு ஆலோசனைகளை வழங்கியுள்ளது. தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் முன்கூட்டி கணக்குகளை பேணுவதற்குத்தான் அந்த முன்மொழிவுகள். தற்போது, அத்தியாவசிய மருந்துகளை வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை JICA மேற்கொண்டு வருகின்றது. அதற்கான கொள்வனவு நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன. அந்த மருந்துகள் திணைக்களத்தால் பெறப்பட்டு அவை மாகாணங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

17. **<u>மிருக மருத்துவர் அலுவலகங்களின் ஊடாக செல்லப்பிராணிகளுக்கு தடுப்பூசி போடப்படுகின்றதா மற்றும் கடமை பணி நேரத்தில் அதற்காக தனிப்பட்ட ரீதியில் கட்டணம் அறவிடப்படுகின்றதா என்பது</u>** மிருக மருத்துவர் அலுவலகங்களின் ஊடாக செல்லப்பிராணிகளுக்கு தடுப்பூசி போடப்படுகின்றதா மற்றும் கடமை பணி நேரத்தில் அதற்காக தனிப்பட்ட ரீதியில் கட்டணம் அறவிடப்படுகின்றதா மற்றும் அந்த பணம் அரசாங்க நிதிற்கு வரவு வைக்கப்படுகிறதா என குழு வினவியது. ஒவ்வொரு மாகாணசபைக்கும் உள்ள அதிகாரத்தின்படி பணம் வெவ்வேறு முறைகளுக்கு அனுப்பப்பட்டு, சேகரிக்கப்பட்ட பணம் அரசாங்க நிதியில் வரவு வைக்கப்படுவதாகவும், இந்த செயல்முறையை ஒரே விதத்தில் பின்பற்ற மேற்கொள்ளப்பட்டிருந்த முயற்சிகள் தோல்வியடைந்ததாகவும் கமத்தொழில் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். **<u>சிபாரிசுகள் / உத்தரவுகள்</u>** இந்தச் சேவைக்கான கட்டண நிர்ணயம் அடங்கலாக அனைத்து மாகாண சபைகளிலும் இந்த நடைமுறையை ஒரே விதத்தில் பின்பற்றுமாறு குழு உத்தரவிட்டது.	அரச கால்நடை மருத்துவ அலுவலர்களால் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பது பற்றி, 2021.03.21. ஆம் திகதிய 01/2012 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கை திருத்தப்பட்டு 09/2024 ஆம் இலக்க 2024.09.20 ஆம் திகதிய சுற்றறிக்கையின் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

பின்னிணைப்பு 01

கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் / அலுவலக கடமைகளின் / பல நிகழ்ச்சித் திட்டங்களின் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தத் தவறியிருக்கின்றமை

வெளிநாடு சென்றுள்ள ஊழியர்கள் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாதுள்ளமை

தொடர் இலக்கம்	உத்தியோகத்தரின் பெயர்	ஒப்பந்தத்திற்கு சாட்சியாக கையொப்பமிட்டுள்ள உத்தியோகத்தர்கள்	வெளிநாடு சென்றுள்ளதற்கான காரணம்	அறவிட வேண்டிய தண்டப் பணம்	2024.09.10 ஆம் திகதிற்கு செலுத்தியுள்ள தொகை	அறவிட வேண்டிய எஞ்சிய தொகை	தற்பொழுது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
01.	திரு ரீ. சிவகுமார்	2010.09.15 ஆம் திகதி முதல் 2013.10.15 ஆம் திகதி வரையான காலப் பகுதிற்கு சாட்சியாளர்களால் கையொப்பமிடவில்லை. 2013.10.31 - 2015.10.31 01. பேராசிரியர் Ikuo igarashi 02. பேராசிரியர் Naoaki yokoyama	கல்வி விவகாரங்கள்	ரூ.1,172,255.00	ரூ.650,000.00	ரூ.522,255.00	திரு ரீ. சிவகுமார் என்பவருக்கு அவரின் நிலுவைத் தொகையை செலுத்துமாறும், அவ்வாறு செலுத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் 2024.05.22 ஆம் திகதி மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
02.	டப்ளியூ. ஏ. எம். பீ. கே. அபயரத்ன	(2017.06.25 ஆம் திகதி முதல் 2020.06.24 ஆம் திகதி) வரை 01. ஜேம்ஸ் எட்வெர்ட் ஜோன் சுயுடொன் (James Edward john suyton)	தொழில் விவகாரங்கள்	ரூ.754,392.00	ரூ.251,464.00	ரூ.502,928.00	திரு டப்ளியூ. ஏ. எம் .பீ. கே. அபயரத்ன என்பவர் கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளாதல் சட்ட நடவடிக்கையை எடுக்குமாறு 2024.08.05 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

03.	திருமதி ஜே. எம். கே. ஜி. ஜயசுந்தர	2013.02.10 ஆம் திகதி முதல் 2016.02.21 ஆம் திகதி வரையான காலப் பகுதிற்கு 01. திருமதி ஏ .பீ. எச். ஹிமாலி ப்ரியதர்ஷனி 02. திருமதி டீ. எம். முதித்தா தர்ஷனி 2013.02.10 ஆம் திகதி முதல் 2017.05.05 ஆம் திகதி வரையான காலப் பகுதிற்கு 01. திருமதி டப்ளியூ. சி. கே. சில்வா (நி.உ.) 02. டீ. எம். ஜி. ஏ. எம். தாரபொக்குண (நி.உ.)	கல்வி விவகாரங்கள்	ரூ.10,856,659.40	ரூ.9,758,659.40	ரூ.1,098,000.00	திருமதி ஜே. எம். கே. ஜி. ஜயசுந்தர என்பவரின் தண்டப் பணத்தை அறவிடுவது தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
04.	திருமதி ஜி. வை. டப்ளியூ. குமாரி	2008.07.06 - 2010.07.26 ஆம் திகதி வரை 01.திரு / திருமதி எம். ஐ. ஜி. ஜயதிலக்க 02. திரு எச். ஏ. மஹிந்தரத்ன 2011.01.18 ஆம் திகதி முதல் 2016.01.18 ஆம் திகதி வரை 01. திரு டப்ளியூ. ஏ. நிமல் ராஜபக்ஷ 02. திரு / திருமதி சி. பி. சி. பி. குணசேக்கர	தொழில் விவகாரங்கள்	ரூ. 986,580.00	-	ரூ.986,580.00	திருமதி ஜி. வை. டப்ளியூ. குமாரி என்பவரிடம் இருந்து ரூ.986,580.00 தொகையான பணம் அறவிடப்படவுள்ளது. அது தொடர்பாக வழக்கு நடவடிக்கையை தொடருமாறு 2021.07.19 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விவகாரங்கள் அமைச்சின் ஊடாக 2022.12.19 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

							சரியான முகவரியை கண்டறிந்து கொள்ள முடியாததால் தற்பொழுது வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. சரியான முகவரியை கண்டறிந்து கொள்ளும் பொருட்டு அவுஸ்திரேலிய தூதுவரக அலுவலகத்திற்கு வெளிநாட்டு இது தவிர, இலங்கைக்கு வருகை தரும் போது அறிவிக்குமாறு குடிவரவு மற்றும் குடியல்கவு கட்பாட்டாளர் அதிபதிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
05.	திருமதி லதாமணி இந்திரகுமார்	2006.04.25 ஆம் திகதி முதல் 2008.04.25 ஆம் திகதி வரையான காலப் பகுதிற்கு 01. திருமதி ரீ. ஏ. சி. திஸ்ஸகுமார 02. திருமதி எஸ் .ஏ. ஏ. பி. சமரசுந்தர	தொழில் விவகாரங்கள்	ரூ. 435,200.00	-	ரூ. 435,200.00	திருமதி லதா இந்திரகுமார் என்பவரிடம் இருந்து ரூ. 435,200.00 தொகை அறவிடப்படவுள்ளது. அது தொடர்பாக வழக்கு நடவடிக்கையை தொடருமாறு 2013.12.20 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

							மேலும் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு அந்த உத்தியோகத்தரின் தற்போதைய முகவரியை கண்டறிந்து கொள்ள முடியாதுள்ளதால் வெளிநாட்டு முகவரியையும் மற்றும் கடவுச்சீட்டு விபரத்தையும் பெற்றுத் தருமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அதிபதிற்கு 2018.07.17 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. 2019.12.23 ஆம் திகதி வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சின் செயலாளரின் ஊடாக கனடாவின் உயர் ஸ்தானிகருக்கு அந்த உத்தியோகத்தரின் தற்போதைய முகவரியை இந்தத் திணைக்களத்திற்கு பெற்றுத் தருமாறு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வசம் அந்த உத்தியோகத்தரின் வெளிநாட்டு முகவரியோ அல்லது மின்னஞ்சல் முகவரியோ இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

								உரிய உத்தியோத்தர் தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு முடியுமாக இருந்தால் இந்தத் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு 2022.10.07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர அவர் இலங்கைக்கு திரும்பி வரும்போது அறிவிக்குமாறும் கோரி 2024.07.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அதிபதிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

06	திரு டீ. எம். டப்ளியூ. சி. பீ. திஸாநாயக்க	2016.06.14 ஆம் திகதி முதல் 2019.06.02 ஆம் திகதி வரை 01. திருமதி நிலுஷி லியனகுணவர்த்தன 02. திருமதி / திரு எம் .எஸ். சி. வீரசூரிய	தொழில் விவகாரங்கள்	ரூ. 2,022,013.00	-	ரூ. 2,022,013.00	திரு டீ. எம். டப்ளியூ. சி. பீ. திஸாநாயக்க என்பவரின் தண்டப் பணத்தை அறவிடுவது தொடர்பாக சட்ட நடவடிக்கையை எடுக்குமாறு 2024.08.21 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு அறிவிப்பட்டுள்ளது. திரு டப்ளியூ. எம் .டப்ளியூ. சி. பீ. திஸாநாயக்க என்பவர் இலங்கைக்கு திரும்பி வரும்போது விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு 2024.01.21 ஆம் திகதி குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பபட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் இது தொடர்பாக கலந்துரையாடும் பொருட்டு நிருவாகப் பிரிவின் உத்தியோகத்தர்களை 2024.09.12 ஆம் திகதி அழைத்தது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

07	திருமதி எம். நந்தா நாணயக்கார	1991.06.07 ஆம் திகதி முதல் 1997.06.07 ஆம் திகதி வரை 01. திரு எம். பி. வில்பிரட் 02. திருமதி எம். கே. குடாமெனிக்கே	தொழில் விவகாரங்கள்	ரூ. 98,049.00	-	ரூ.98,049.00	திருமதி எம். நந்தா நாணயக்கார என்பவரிடம் இருந்து ரூ. 98,049.00 தொகையை அறவிட வேண்டியுள்ளது. இந்த உத்தியோகத்தரிடமிருந்து இந்தத் தொகையை அறவிடும் பொருட்டு உரிய கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் 29052/எம்.ஆர். என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளது. தற்பொழுது அந்தப் பணத்தின் பெறுமதி குறைந்துள்ளதால் உரிய வழக்கை துல்லியமாக முன்னெடுத்து செல்வது செயன்முறை சாத்தியமில்லை என்பதால் மேலும் நடவடிக்கையை எடுப்பது தொடர்பாக 2022.10.17 ஆம் திகதி சட்டமா அதிபரின் அறிவுரைகள் நாடப்பட்டுள்ளன.
	மொத்தம்					**ரூ.5,665,025.00**	

அனைத்து உத்தியோகத்தர்களும் இலங்கைக்கு வரும்போது இந்தத் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2024.07.22 ஆம் திகதி குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தண்டப் பணத்தை செலுத்துமாறு கோரி மேற்குறித்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நினைவூட்டும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.